4. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164–வது விதியின் கீழ் 1969–70–ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைமை வகுத்துள்ள விதி முறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 25–3–1969 செவ்வாய்க் கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள லாம்.

நியமனத்தாள்கள் 26–3–1969 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட் பாளர்கள் 26–3–1969 புதன்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, பதினாறுக்கு மேற் படுமாயின், 27–3–1969 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 173–வது விதியின் கீழ் 1969–70–ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக் கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக் கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படு வதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 25–3–1969 செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 26–3–1969 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட் பாளர்கள் 26–3–1969 புதன்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.